DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No. 207/2021
*****

Deposition of Witness for Prosecution witness No: PW10

| | |
|---|---|
| பட்டியல் சாட்சி | : LW11 |
| Name | : **டாக்டர் பாபு அலாய்** |
| Father`s Name | : ஏப்.ஏ. ஜார்ஜ் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 17.10.2023 |

**( Accused called absent and u/s 317 Cr.Pc is filed and allowed. Counsel for Defense present. )**

Solemnly affirmed by Selvi M.K.Anusha, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் எலும்பு முறிவு பகுதியில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.02.2019 அன்று காலை 05.50 மணிக்கு குருசாமி என்ற 55 வயது நபர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு இடது மார்பில் 5X2cm சிதைந்த காயமும், இடது முழங்கையில் பின்புறத்தில் 6X3X2 cm சிதைந்த காயமும் காணப்பட்டது. மேலும் அவருக்கு இடது கையில் இரண்டு மூன்று, நான்கு ஐந்து ஆகிய விரல்களில் உள்ள தசை நார் அறுபட்டு காணப்பட்டது. அவருக்கு Xray எடுத்து பார்த்ததில் இடது முழங்கையில் இருஎலும்புகளும் முறிந்துள்ளது.

அன்றைய தினமே அவருக்கு நெஞ்சக நோய் அறுவை சிகிச்சை நிபுணரிடம் அறிவுரை பெறப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. 21.02.2019 அன்று ஒட்டுஉறுப்பு அறுவைசிகிச்சை நிபுணரிடம் அறிவுரை பெறப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. இருதய நோய் மருத்துவரிடம் ஒப்புதல் பெறப்பட்டு 28.02.2019 அன்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அவர் தசை நார்அறுவை சிகிச்சை செய்வதற்காக ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை பகுதியில் சிகிச்சை பெற சேர்ந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டு, 08.03.2019 அன்று விடுவிக்கப்பட்டார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர். என்னிடம் காண்பிக்கப்படுவது நான் அளித்த சிகிச்சை விவரங்கள் **அ.சா.ஆ–5** ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

குருசாமி என்பவருக்கு காயம் ஏற்பட்டு காயத்தின் தன்மை வெட்டு காயங்களா, குத்துபட்ட காயங்களா என்றால் நான் பார்த்த பொழுது அவருக்கு சிதைந்த காயங்கள் காணப்பட்டது. முழங்கையின் பின்புறத்தில் என்று நான் வாக்குமூலம் கொடுத்துள்ளேன். முன்னங்கை என்று சொல்லவில்லை.

**ம.வி இல்லை.**